அறிக்கையிடப்படக்கூடியது

இந்திய உச்ச நீதிமன்றம்

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு

குற்றவியல் மேல்முறையீட்டு எண் 895-896/2018

(சிறப்பு அனுமதி மனு (குற்றவியல்) எண்கள் 8259-60/2016-இலிருந்து எழுகின்றன)

குஜராத் மாநில அரசு ... மேல்முறையீட்டாளர்

எதிர்

நவீன்பாய் சந்த்ரகாந்த் ஜோஷி

மற்றும் பலர் ... எதிர்மேல்முறையீட்டாளர்கள்

<u>தீர்ப்புரை</u>

<u>மாண்புமிகு நீதியரசர் திருமதி ஆர். பானுமதி:</u>

அனுமதி வழங்கப்பட்டன.

2. இம்மேல்முறையீடுகள், குஜராத் உயர் நீதிமன்றத்தால், குற்றவியல் மேல்முறையீடு எண்கள் 477-78/2000-இல் வழங்கப்பட்ட, 16.04.2015-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரையிலிருந்து எழுகின்றன. அதன்மூலம், சிறப்பு (ஊழல் தடுப்புப் பிரிவு) வழக்கு எண் 10/1992-இல் விசாரணை நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தண்டனைத் தீர்ப்புரையை உயர் நீதிமன்றம் எதிர்மறையாக்கி,

ஊழல் தடுப்புச் சட்டம், 1988 (' சட்டம் ') பிரிவு 7 மற்றும் பிரிவு 13 (1) (டி) -இன் கீழ், எதிர்மேல்முறையீட்டாளர்களை விடுவித்தது.

3. அரசுத்தரப்பின் வழக்கானது சுருக்கமாகக் குறிப்பிடுவது யாதெனில், 1-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவர்/2-ஆம் எதிர்மேல் முறையீட்டாளரான ஜே.டி. பட்டேல், தரிசு நிலத் துறையில் இளநிலை எழுத்தராகப் பணியாற்றி வந்தார். 2-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவர்/ 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரான நவீன்பாய் சந்த்ரகாந்த் ஜோஷியும் (நவீன்பாய்), அதே துறையில் பணியாற்றி வந்தார். முறையீட்டாளர்-பகவன்தாஸ் (அ.சா.1), சர்க்கரை வணிகத்தில் மொத்த, சில்லறை வியாபாரம் செய்துவரும் ஒரு வியாபாரி ஆவார். முறையீட்டாளர்/அ.சா.1 அக்ரிலிக் மோனோமல் தயாரிப்பதற்காக, பர்வி மோனோமல் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தை துவக்க விரும்பி, அந்த நோக்கத்திற்காக அவர், சத்ரால் என்னும் கிராமத்தில், சந்தீப் அகர்வால் மற்றும் மனோஜ் அகர்வால் என்பவர்களிடமிருந்து காலியிடம் ஒன்றை வாங்கியுள்ளார். 1990-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் விற்பனை உடன்படிக்கை நிறைவேற்றப்பட்டு, 1991-ஆம் ஆண்டு மார்ச் திங்களில் விற்பனைப் பத்திரமானது நிறைவேற்றப்பட்டது. மனையின் அசல் உரிமையாளர்கள், மனையை வேறு நோக்கத்திற்காக, தரிசு நிலமாக மாற்றியிருந்தபொழுதிலும், அ.சா.1, தரிசு நிலம் பொருட்டு தேவையான அனுமதியைப் பெறுவதற்காக திருத்தப்பட்ட வரைபடத்தை சமர்ப்பிக்க வேண்டியிருந்தது.

4.அ.சா.1-இன் வழக்கு விவரமாவது, 1-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரான ஜே.டி. பட்டேல், அ.சா.1-இன் திருத்தப்பட்ட வரைபடத்திற்கு தேவையான அனுமதிபெற்று,

அங்கீகரிக்கப்படுவதை தான் கவனித்துக்கொள்வதாக பலமுறை அ.சா.1-யிடம் உறுதியளித்தார்; அ.சா.1-இன் திருத்தப்பட்ட வரைபடமானது ஏற்கப்படாமல் அவருடைய விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது என்று 27.03.1991 அன்று, 1-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரான ஜே.டி. பட்டேல் மூலம் அ.சா.1 தெரிந்துகொண்டார்; தாலுக்கா மேம்பாட்டு அலுவலரின் பணித்தலின்பேரில் அ.சா.1, தண்டமாக ரூ.368.30-ஐ 02.04.1991 அன்று சத்ரால் கிராம பஞ்சாயத்து அலுவலகத்தில் செலுத்தி, அந்த ரசீதை தாலுக்கா மேம்பாட்டு அலுவலர் முன்பாக சமர்ப்பித்தார்; அந்நேரத்தில், விடயத்தை விரைவாகச் செய்து, தேவையான அனுமதி வழங்கப்படுவதற்காக அதை விரைவு படுத்துவதை உறுதிப்படுத்துவதற்கு கோப்பு வழக்கமாக எவரிடம் இருக்குமோ, அந்த 1-ஆம் குற்றம் சாட்டப்பட்டவரான ஜே.டி. பட்டேலை அ.சா.1 வேண்டினார்; அச்சமயத்தில், 1-ஆம் குற்றம் சாட்டப்பட்டவரான ஜே.டி. பட்டேல், விடயத்தை விரைவு படுத்துவதற்காக ரூ.1,000/- கோரினார்; இறுதியில் ரூ.500/-என முடிவு செய்யப்பட்டது.1-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவர், அ.சா.1-இடம் 03.04.1991 அன்று ஓய்வு இடைவேளைக்கு முன்பாக, அ.சா.1 ரூ.500/-ஐ செலுத்தவேண்டும் என்றும், அத்தொகை பெறப்பட்ட பின்னர், அவருக்கு ஆதரவாக, தேவையான அனுமதி உத்தரவு வழங்கப்படுமாறு கவனித்துக் கொள்வேன் என்றும் கூறினார். அ.சா.1 ஊழல் தடுப்புப் பிரிவு அலுவலகத்தை அணுகி, 1-ஆம் குற்றம் சாட்டப்பட்டவருக்கெதிராக முறையிட்டார். வழக்கைப் பதிவுசெய்த பிறகு, வழக்கமான நடைமுறைகளைப் பின்பற்றிய பின்னர், பொறியமைப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. 03.04.1991 அன்று, அ.சா.1, அ.சா.3-ஆன

தேவேந்திர குமாருடன், 1-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரான ஜே.டி. பட்டேலிடம் சென்றார். 1-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரான ஜே.டி. பட்டேல், 2-ஆ குற்றஞ்சாட்டப்பட்டவரான நவீன்பாயை, அ.சா.1-க்கு காட்டி, படிமேடையில் இருந்த 2-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரான நவீன்பாயிடம் பணத்தைக் கொடுக்குமாறு அ.சா.1-யிடம் கூறினார். அ.சா.1, 2-ஆம் குற்றம் சாட்டப்பட்டவரான நவீன்பாயிடம் பணத்தைக் கொடுத்ததும், அவர் அதனை தன்னுடைய இடது சட்டைப் பையில் வைத்துக்கொண்டு, 1-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரான ஜே.டி. பட்டேலின் அருகே சென்று அமர்ந்துகொண்டார். அ.சா .1, ஏற்கெனவே முடிவு செய்திருந்த சமிக்ஞையை காண்பித்ததன்பேரில், காவல்துறையினர் உள்ளே வந்து, 2-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரான நவீன்பாயிடமிருந்து, பணத்தாள்களைப் பறிமுதல் செய்தனர். 2-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரான நவீன்பாய் ஜோஷியின் சட்டையின் மீது புற ஊதா ஒளியைச் செலுத்தியதில், 2-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரான நவீன்பாயால் அணியப்பட்ட சட்டையின் இடதுபக்க சட்டைப்பையில், ஆந்த்ரசீன் பொடியில் இள நீல ஒளியின் வெண்ணிறத்தை காண முடிந்தது. அதுபோன்றே, 1-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரான ஜே.டி. பட்டேலின் கைகள் மீது புற ஊதா ஒளியைச் செலுத்தியதில், 1-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரின் வலது கை நான்கு விரல்களிலும், ஆந்த்ரசீன் பொடியின் இள நீலநிற ஒளி வெண்ணிறமாக மின்னுவதைக் காணமுடிந்தது.புலனாய்வு முடிந்ததும், குற்றஅறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்பதாகும்.

5.குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் குற்றத்தை நிரூபிக்க, அரசுத்தரப்பானது ஆறு சாட்சிகளை விசாரித்து, ஆவணச் சான்றுகளைச் சமர்ப்பித்தது. வாய்மொழி மற்றும் ஆவணச் சான்றுகளைப் பரிசீலித்து, அ.சா.1 மற்றும் அ.சா.3-இன் சாட்சியத்தின் மூலமும், 2-ஆவது குற்றஞ்சாட்டப்பட்டவரான நவீன்பாயின் சட்டைப் பையிலும் மற்றும் 1-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரான ஜே.டி. பட்டேலின் வலது கையிலும் ஆந்த்ரசீன் பொடி இருந்ததையும், சட்டவிரோதமான கைக்கூலி கோரப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதையும் அரசுத்தரப்பானது நிரூபித்தது என விசாரணை நீதிமன்றம் தீர்ப்பளித்து உள்ளது. விசாரணை நீதிமன்றமானது, 1 மற்றும் 2-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவர்களான இருவருக்கும் சட்டப்பிரிவு 7 மற்றும் 13 (1) (டி) -இன் கீழ் தண்டனைத் தீர்ப்பளித்து, அவர்கள் ஒவ்வொருவருக்கும் முறையே ஓராண்டு மற்றும் இரண்டு ஆண்டுகள் கடுஞ்சிறைத் தண்டனையும், மேலும் தவறுகை கூறுடன் தண்டமும் விதித்தது.

6.பாதிப்படைந்தவர்களான குற்றஞ்சாட்டப்பட்டவர்கள், உயர் நீதிமன்றத்தின் முன்பாக மேல்முறையீடுகள் செய்தனர். உயர் நீதிமன்றமானது, எதிர்ப்பிற்குள்ளான தீர்ப்புரையின் மூலம், விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரையை எதிர்மறையாக்கி, 1-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரான ஜே.டி. பட்டேலிடமிருந்து ஏதும் கைப்பற்றப்படவில்லை என்றும், குற்றம் சாட்டப்பட்டவர்களால் இலஞ்சம் கோரப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்பட்டதாக நிரூபிக்கப்படவில்லை என்றும் தீர்ப்பளித்து, அவர்களை விடுவித்தது. அதனால் பாதிப்படைந்து, அரசானது விடுதலையின் சரித்தன்மையை எதிர்த்து இம்மேல்முறையீடுகளைத் தாக்கல் செய்துள்ளது.

7.குஜராத் மாநில அரசுக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திருமதி/செல்வி. ஊறமந்திகா வாஉறி மற்றும் எதிர்மேல்முறையீட்டாளர்களுக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. பார்த்திவ் கோஸ்வாமி ஆகியோரின் வாதங்களைக் கேட்டோம். நாங்கள், எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையையும், விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரையையும் மற்றும் பதிவாவணத்திலுள்ள சான்றாதாரங்களையும் பார்வையிட்டோம்.

8.சட்டப்பிரிவுகள் 7 மற்றும் 13 (1) (டி) -இன் கீழான குற்றத்தை நிலைநாட்ட, குறிப்பாக, பொறியமைப்பு வழக்குகளைப் பொறுத்து, அரசுப் பணியாளரால் இலஞ்சம் கோரப்பட்டும், ஏற்கப்பட்டுமிருந்ததை அரசுத்தரப்பு நிரூபிக்கவேண்டும் என்பது நன்கு வரையறுக்கப்பட்டதாகும்.பி. ஜெயராஜ் -எதிர்-ஆந்திரப் பிரதேச மாநில அரசு, (2014) 13 எஸ்.சி.சி. 55:(2014 ஏ.ஐ.ஆர். எஸ்.சி.டபிள்யூ.2080) என்ற வழக்கில் கீழ்க்காணுமாறு தீர்ப்பளிக்கப்பட்டதாவது:

> "7. பிரிவு 7-இன் கீழான வழக்கைப் பொறுத்த வரையில், மேற்படி குற்றத்தை நிறுவ, சட்டவிரோத கைக்கூலியை கோருவது என்பது இன்றியமையாக் கூறாகும்; குற்றம் சாட்டப்பட்டவர் இலஞ்சத் தொகையென அறிந்தே பணத்தைப் பெற்றுக்கொண்டார் என அனைத்து ஐயப்பாடுகளுக்கும் அப்பால் அது நிரூபிக்கப்-பட்டாலன்றி, பிரிவு 7-இன் கீழான குற்றத்தை நிறுவ, பணத்தாள்களைக் கைப்பற்றலொன்றே குற்றத்தை நிறுவுவதாகாது என்பது சட்டத்தில் நன்கு தீர்வு

செய்யப்பட்ட நிலையாகும். மேற்படி நிலைப்பாடானது, இந்நீதிமன்றத்தின் பல்வேறு தீர்ப்புரைகளில் சுருக்கமாக வகுத்துரைக்கப்பட்டுள்ளன. சி.எம். ஷர்மா-எதிர்-ஆந்திரப் பிரதேச மாநில அரசு, (2010) 15 எஸ்.சி.சி. 1 : மற்றும் சி.எம். கிரிஷ் பாபு எதிர் சி.பி.ஐ., (2009) 3 எஸ்.சி.சி. 79-இன் தீர்முடிவினை எடுத்துக்காட்டின் மூலம் சுட்டிக்காட்டலாம்."

9.தற்பொழுதைய வழக்கில், 1-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரான ஜே.டி. பட்டேலால் இலஞ்சத் தொகை கோரப்பட்டதும், அவருடைய கட்டளையின்படி அத்தொகையானது, 2-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரான நவீன்பாயால் ஏற்கப்பட்டதும், அ.சா.1 மற்றும் அ.சா.3-இன் சாட்சியத்தின்மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. அ.சா.1 தன்னுடைய சாட்சியத்தில், தரிசு நிலத்திற்கான திருத்தப்பட்ட வரைபட அனுமதியை அங்கீகரிப்பது தொடர்பான விடயத்தை விரைவுப்படுத்த, 1-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரான ஜே.டி. பட்டேலால் இலஞ்சம் கோரப்பட்டதைப் பற்றி தெளிவாகக் கூறியிருந்தார். 1-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரான ஜே.டி. பட்டேலை, தான், 03.04.1991 அன்று சந்தித்தபொழுது, அவரிடமிருந்து பணத்தை அலுவலகத்தில் பெறுவது முறையாக இருக்காதென்று 1-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரான ஜே.டி. பட்டேல் கூறி, தனக்கு 2-ஆம் குற்றஞ்சாட்டப் பட்டவரான நவீன்பாயைக்காட்டி, அவரிடம் பணத்தைக் கொடுக்குமாறு தன்னிடம் கூறியதாகவும் அ.சா.1 கூறினார். மேலும், அ.சா.1 கூறியதாவது, அவர், படிமேடைக்குச் சென்று, 2-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரான நவீன்பாயிடம் கறைபடிந்த பணத்தாள்களைக் கொடுத்தார்.அதன்பின்னர், 2-ஆம்

குற்றஞ்சாட்டப்பட்டவரான நவீன்பாய், 1-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரான ஜே.டி. பட்டேலுக்கு அருகில் சென்று உட்கார்ந்தார். முன்னேற்பாடான சமிக்ஞையை காட்டியதன்பேரில், காவலர் குழுவானது உள்ளே சென்று, 1 மற்றும் 2-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவர்களை விசாரித்தது. 2-ஆம் குற்றஞ்சாட்டப்-பட்டவரான நவீன்பாயை சோதித்ததில், அவருடைய இடதுபக்க சட்டைப் பையிலிருந்து கறைபடிந்த பணத்தாள்கள் கைப்பற்றப்பட்டன. புற ஊதா விளக்கொளியைச் செலுத்தியதில், 2-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரான நவீன்பாயின் இடதுபக்க சட்டைப் பையில் ஆந்த்ரசீன் பொடி இருந்ததைக் காட்டியது. அதேபோல், 1-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரான ஜே.டி. பட்டேலின் கைகள் மீது புற ஊதா விளக்கொளியைச் செலுத்தியதில், அதில் ஆந்த்ரசீன் பொடி இருந்ததைக் காட்டியது. 1-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரான ஜே.டி. பட்டேலாலும், 2-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரான நவீன்பாயாலும் இலஞ்சம் கோரப்பட்டது என்பது அ.சா .1-இன் சாட்சியத்திலிருந்து அரசுத்தரப்பினால் நிரூபிக்கப்பட்டுள்ளது. அது, 2-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரான நவீன்பாய் அணிந்திருந்த சட்டையிலும், 1-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரான ஜே.டி. பட்டேலின் வலது கையிலும் ஆந்த்ரசீன் பொடி இருந்ததை பற ஊதா ஒளியைச் செலுத்தும் சோதனைமூலமும் உறுதி செய்யப்பட்டுள்ளது. அ.சா.1-இன் சாட்சியமானது, அ.சா.3-தேவேந்திர குமாரின் சாட்சியத்தால் உறுதி செய்யப்படுகிறது. அ.சா.1 மற்றும் 3-இன் சாட்சியம் ஒத்துப்போகின்றது என்றும், அவர்கள் நம்பத்தக்க சாட்சிகள் என்றும் காண்முடிவுகளை விசாரணை நீதிமன்றம் பதிவு செய்துள்ளது. அரசுத்தரப்பினால் முன்வைக்கப்பட்ட சாட்சியத்தை மதிப்பீடு செய்து,

விசாரணை நீதிமன்றமானது, 1 மற்றும் 2-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் குற்றத்திற்கான தீர்ப்பளித்தது.

10.குற்றஞ்சாட்டப்பட்டவரான ஜே.டி. பட்டேல் இடமிருந்து ஏதும் கைப்பற்றப்படவில்லை என்றும், குற்றஞ்சாட்டப்பட்டவர்களால் ஏதும் கோரப்பட்டது என அரசுத்தரப்பால் நிலைநாட்டப்-பட்டிருக்கவில்லை என்ற காரணத்தின்பேரிலும் உயர் நீதிமன்றம் குற்றஞ்சாட்டப் பட்டவர்களை விடுவித்தது. அ.சா.1-ஆல் எதன்பொருட்டு 1-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரான ஜே.டி. பட்டேலுக்கு பணம் கொடுக்கப்பட்டது என்பது குறித்து 2-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரான நவீன்பாய்க்கு எதுவும் தெரியாதென்பதால், 2-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரான நவீன்பாய், அ.சா.1-யிடம் கேட்கப்பட்டதன்பேரில் கொடுக்கப்பட்ட இலஞ்சத் தொகையை ஏற்றுக்கொண்டதாக கூறப்பட முடியாது என்று உயர் நீதிமன்றம் கருதியது. காலிமனையை தரிசு நிலமாக்கும் பொருட்டான விடயத்தை விரைவுப்படுத்துவதற்காக, 1-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரான ஜே.டி. பட்டேல் ரூ.1000/-ஐ இலஞ்சமாகக் கேட்டு, அது ரூ. 500/-ஆக நிர்ணயிக்கப் பட்டது எனத் தெளிவாகக் கூறியுள்ள அ.சா.1-இன் சாட்சியத்தை உயர் நீதிமன்றம் புறக்கணித்தது சரியல்ல. 2-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரான நவீன்பாயிடமிருந்து கறைபடிந்த பணத்தாள்கள் கைப்பற்றப்பட்டதும், 1-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரான ஜே.டி. பட்டேலின் வலது கையிலும், 2-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவரான நவீன்பாயின் சட்டைப் பையிலும் ஆந்த்ரசீன் பொடி இருந்ததும், அவர்கள் இலஞ்சத் தொகையைக் கேட்டுப் பெற்றுக்கொண்டதில் இணைந்தே செயல்-பட்டுள்ளனர் என்பதை தெளிவாகக் காட்டுகின்றன.- சட்ட

விரோதமான கைக்கூலி கோரப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டதை, அ.சா .1 மற்றும் 3-இன் சாட்சியத்தின் மூலம் நிரூபிக்கப் பட்டிருக்கும் பொழுது, அது கேட்கப்பட்டதும், ஏற்கப்பட்டதும் நிரூபிக்கப்படவில்லை என உயர் நீதிமன்றம் முடிவெடுத்தது சரியானதல்ல. விசாரணை நீதிமன்றத்தின் காண்முடிவுகள் எவ்விதத்திலும் குறைபாடுடையதல்ல மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் தண்டனைத் தீர்ப்பை நீக்கறவு செய்ததில் உயர் நீதிமன்றமானது நியாயப்படுத்தப்படவில்லை.

11. சட்டத்தின் பிரிவு 7-இன் கீழான குற்றம் தொடர்பாக, சட்டப்பிரிவு 20-இன் கீழ் எழுப்பப்பட்ட அனுமானத்தைப் பொறுத்தவரையில், சட்டப்பிரிவு 20-இன் கீழ் எழுப்பப்படும் அனுமானமானது மறுக்கத்தக்க அனுமானமாகும் என்பதும், அனுமானத்தை மறுப்பதற்காக மேல்முறையீட்டாளர் மீது சுமத்தப்பட்ட பொறுப்பு என்பதும் பெரிதும் நிகழக்கூடிய ஒன்றாகும். சி.எம். கிரிஷ் பாபு -எதிர்- சி.பி.ஐ. கொச்சியிலுள்ள கேரள உயர் நீதிமன்றம், (2009) 3 எஸ்.சி.சி. 779-இல் இந்நீதிமன்றம் கீழ்க்காணுமாறு தீர்ப்பளித்ததாவது:

> "21. பிரிவு 20-இன் கீழ் எழுப்பப்படக்கூடிய அனுமானமானது, மீறக்கூடாத ஒன்றல்ல என்பது நன்கு தீர்வு செய்யப்பட்டுள்ளது.குற்றஞ்சாட்டப்பட்டவர், அதை தனக்கெதிராக நிறுத்தப்பட்ட சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்வதன்மூலமோ அல்லது நம்பத்தக்க சான்றுகளைச் சமர்ப்பிப்பதன்மூலமோ மறுக்கலாம் .....

22. சட்டப்பிரிவு 20-இன் கீழ் எந்தக் குற்றம் சாட்டப்பட்டவருக்கெதிராக குற்றம் அனுமானிக்கப்பட்டு, அவர்மீது சுமத்தப்பட்ட நிரூபிக்கும் பொறுப்பானது, வழக்கை நியாயமான ஐயத்திற்கப்பால் நிரூபிப்பதற்கு அரசுத்தரப்பின்மீது சுமத்தப்பட்ட பொறுப்புடன் தொடர்புடையதல்ல ..... "

குற்றஞ்சாட்டப்பட்டவர், இலஞ்சத் தொகையை வைத்திருந்தார் என்பது நிலைநாட்டப்பட்டதையடுத்து, இலஞ்சத் தொகையானது எவ்வாறு அவர்களால் ஏற்கப்பட்டுள்ளது என்பதை விளக்குவது அவர்களைச் சார்ந்ததாகும் மற்றும் அவர் திருப்திகரமான விளக்கமளிக்கத் தவறினால், அவர் இலஞ்சம் பெற்றதை ஒப்புக்கொண்டதாக அனுமானிக்கப்படும்.

12. கையிலுள்ள வழக்கில், சட்டப்பிரிவு 20-இன் கீழான அனுமானத்தை மறுப்பதற்கு குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் எந்த விளக்கத்தையும் அளிக்கவில்லை. மறுபுறத்தில், அ.சா.1-இன் சாட்சியத்திலிருந்து 1-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவர் இலஞ்சம் கேட்டார் என்பது இயல்பானதாகவே தோன்றுகிறது. திருத்தப்பட்ட வரைபட அங்கீகரிப்புக்கான விண்ணப்பமானது முன்னதாக நிராகரிக்கப்பட்டது. முறையீட்டாளரும், அவருடைய வழக்குரைஞரும் தாலுக்கா மேம்பாட்டு அலுவலரை சந்தித்து, அவருடைய பணித்தலின்பேரில் தேவையான தண்டத்தொகையை அ.சா.1 செலுத்தியுள்ள பொழுது, கோப்பானது அவசியம் செயல்முறைப்படுத்தப்பட்டிருக்கவேண்டும். அந்நேரத்தில்தான் 1-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவர், அ.சா.1-யிடமிருந்து இலஞ்சம் கேட்டார். சான்றை மதிப்பிடுகையில், அ.சா.1 மற்றும் 3-இல் அனைத்து

சாட்சியத்தின் நம்பகத்தன்மை குறித்து விசாரணை நீதிமன்றத்தின் கருத்துகளுக்கு உயர் நீதிமன்றமானது முறையான முக்கியத்துவம் அளித்திருக்க வேண்டும். விசாரணை நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்ட காண்முடிவுகள் சான்று மதிப்பீட்டின் அடிப்படையிலானது எனும்பொழுது, உயர் நீதிமன்றமானது, விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர் மறையாக்கியது சரியானதல்ல.

13. சட்டப்பிரிவு 13 (1) (டி)-இன் கீழ் குற்றத்திற்காக விதிக்கப்பட்ட சிறைத்தண்டனையைப் பொறுத்தவரையில், விசாரணை நீதிமன்றமானது, குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா இரண்டாண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது. சம்பவமானது 1991-ஆம் ஆண்டில், அதாவது, 27 ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்தது. காலங்கடந்ததைக் கருத்திற்கொண்டு, இரண்டாண்டுகள் சிறைத்தண்டனையை சட்டப்படி குறைந்த தண்டனையான ஓராண்டு சிறைத்தண்டனையாக குறைப்பது பொருத்தமானதென நாங்கள் கருதுகின்றோம்.

14. முடிவில், குற்றவியல் மேல்முறையீடு எண்கள் 477-78/2000-இல் உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட 16.04.2015-ஆம் தேதியிடப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையானது நீக்கறவு செய்யப்பட்டு, சட்டப்பிரிவு 7 மற்றும் பிரிவு 13 (1) (டி) -இன் கீழ் 1 மற்றும் 2-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் குற்றத்திற்கான தீர்ப்புரையை உறுதிசெய்து, இம்மேல்முறையீடுகள் அனுமதிக்கப்-படுகின்றன. குற்றஞ்சாட்டப்பட்ட ஒவ்வொருவருக்கும் சட்டப்பிரிவு 13 (1) (டி)-இன் கீழ் விதிக்கப்பட்ட சிறைத்தண்டனையானது, இரண்டாண்டுகள் சிறைத்தண்டனையிலிருந்து, ஓராண்டு

சிறைத்தண்டனையாகக் குறைக்கப்படுகிறது. 1 மற்றும் 2-ஆம் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்/எதிர்மேல்முறையீட்டாளர்கள் எஞ்சியுள்ள சிறைத்தண்டனையை அனுபவிப்பதற்காக இன்று முதல் இரண்டு வார காலத்திற்குள்ளாக அவர்களாகவே சரணடையவேண்டும், தவறும்பட்சத்தில், அவர்கள் கைது செய்யப்படுவார்கள். மேல்முறையீடுகள் அனுமதிக்கப்படுகின்றன.

மாண்புமிகு நீதியரசர் திரு. இரஞ்சன் கோகாய்
மாண்புமிகு நீதியரசர் திருமதி ஆர். பானுமதி

புது தில்லி,
ஜூலை 17, 2018

<u>உரிமைத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."